# பேச்சுப் போட்டியில் வாய்மொழித் தொடர்பாடல் பகுதி

## ஆரம்பப் பள்ளி - மாதிரி வினாக்கள்

கேள்விகள் பேச்சு வழக்கில் கேட்கப்படும். உ+ம்: "உங்கட பேர் என்ன?". மாணவர்கள் கேள்வியை விளங்கிக் கொள்ளாதவிடத்து, ஒத்த சொற்களைப் பயன்படுத்தியோ அல்லது எழுத்து வழக்கிலோ கேள்விகள் கேட்கப்படும். உ+ம்: கூறுங்கள் = சொல்லுங்கள் / மிருகம் = விலங்கு.

1. வணக்கம். உங்கள் பெயர் என்ன?
   உங்களுக்கு எத்தனை வயது?

2. உங்கள் வீட்டில் யார் யார் இருக்கின்றார்கள்?
   வீட்டில் உங்களுக்கு யாரை அதிகம் பிடிக்கும் (விருப்பம்)?
   ஏன் அவரைப் பிடிக்கும்?

3. உங்கள் நண்பரின் பெயர் என்ன?
   நீங்கள் நண்பர்களுடன் என்ன விளையாடுவீர்கள்?
   இந்த விளையாட்டுப் பற்றிக் கூறுங்கள்?

4. உங்களுக்குத் தெரிந்த மிருகம் (விலங்கு) பற்றிக் கூறுங்கள் (சொல்லுங்கள்)?

5. உங்களுக்குத் தமிழ்ப் பாட்டுக்கள் தெரியுமா?
   உங்களுக்குக் கதைகள் தெரியுமா?
   உங்களுக்குத் தெரிந்த தமிழ்ப் பாட்டு அல்லது கதை ஒன்று எங்களுக்குச் சொல்லுங்கள்?

6. வேறு ஏதாவது நீங்கள் எங்களுக்குச் சொல்ல விரும்புகின்றீர்களா?
   அதைக் (அவற்றைக்) கூறுங்கள்?

நன்றி.